சிறப்புக்குறிப்பு 10

## குறைவடைந்த அரசிறைத் திரட்டல்களுக்கு மத்தியில் அரச செலவினத்தின் வினைத்திறனான முகாமைத்துவத்தின் முக்கியத்துவம்

### பொதுநோக்கு


குறைவடைந்த அரசிறைச் சேகரிப்புக்கள் மற்றும் அதிகரித்துவரும் அரச செலவினம் என்பவற்றிற்கு மத்தியில் பெரும்பாலும் சுதந்திரத்திற்குப் பின்னரான காலப்பகுதி முழுவதிலும் இலங்கையின் இறைத் தொழிற்பாடுகள் பாரிய கட்டமைப்புரீதியான வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையினை பிரதிபலித்திருந்தன. உண்மையில், அரசாங்கத்தின் வருமானமானது மீண்டெழும் செலவினைக்கூட ஈடுசெய்வதற்கு போதுமானதாக காணப்படாமையானது அரச நடைமுறைக் கணக்கில் (வரைபடம் சி.கு.10.1) தொடர்ச்சியான பற்றாக்குறையினைத் தோற்றுவித்து வருகின்றது. இதற்கு மத்தியில், அரசின் மீண்டெழும் செலவினம் பெரும்பாலும் அரசிறையின் வளர்ச்சியினைக் காட்டிலும் விரைவான வேகத்தில் தொடர்ந்தும் அதிகரித்து வருகின்றமை, இறை நிலைமையினை மேலும் மோசமாக்கியிருக்கின்றது. மீண்டெழும் செலவினம் தொடர்ச்சியாக அதிகரித்து வருவதும் மூலதனச் செலவினம் மதிப்பீடுகளிலும் பார்க்கக் குறைவாக இருப்பதுவும் பொருளாதாரத்தின் நீண்டகால வளர்ச்சி வாய்ப்புக்களை மோசமாகப் பாதித்திருக்கின்றன. இருப்பினுங்கூட, அரசின் ஆரம்பச் செலவினத்தில் (அதாவது வட்டிக் கொடுப்பனவுகளைக் கழித்த மொத்தச் செலவினம்) காணப்படும் நெகிழ்ச்சியற்ற தன்மை சுதந்திரத்திற்குப் பின்னரான வரவு செலவுத்திட்டத் தொழிற்பாடுகளில் ஒரு சில ஆண்டுகளைத் தவிர, ஆரம்ப மீதியில் நிலையான பற்றாக்குறையினையே விட்டுச் சென்றிருக்கின்றது. இறைத் தொழிற்பாடுகளில் காணப்பட்ட விடாப்பிடியான பற்றாக்குறை தொடர்ந்தும் காணப்படுவதுடன் தொடர்ச்சியாக கடன்பட்ட நிதியின் மூலமாக அவை நிதியீட்டம் செய்யப்பட்டமையின் காரணமாக அரச படுகடன் கடந்த ஆண்டுகளில் ஒன்றுதிரண்டு காணப்படுவதுடன் எதிர்வரும் காலத்தில் படுகடன் நிலைத்து நிற்குந்தன்மை தொடர்பான கரிசனைகளையும் தோற்றுவித்து வருகின்றது. அரச படுகடன் இருப்பு தொடர்ந்தும் பாரியளவில் காணப்படுவதனால் வட்டிக் கொடுப்பனவுகள் மீதான செலவினம் தொடர்ந்தும் அதிகரிக்கும் என்பதனால் மீண்டெழும் செலவினத்தினை முன்மதியுடன் முகாமைப்படுத்தாதபோது மீண்டெழும் செலவினத்தின் முகாமைத்துவம் எதிர்வரும் ஆண்டுகளில் சவாலுக்குரியதாக இருக்கக்கூடும். மீண்டெழும் செலவினத்தின் ஏனைய பாரிய செலவின வகைகளான சம்பளங்கள், கூலிகள் மற்றும் ஓய்வூதியக் கொடுப்பனவுகள் என்பன இறைத் தொழிற்பாடுகளின் மீது, குறிப்பாக, கூடியளவு ஆட்கள் அரச துறை பதவிகளுக்குச் சேர்த்துக் கொள்ளப்படும் பொழுது குறிப்பிடத்தக்க அழுத்தத்தினைத் தோற்றுவிக்கக்கூடும். மேலும், குறிப்பாக நாட்டில் வயது முதிர்ந்த குடித்தொகையினர் அதிகரித்து வருகின்றதொரு பின்னணியில் அரச துறையின் நிதியிடப்படாத ஓய்வூதியத் திட்டம் அதனுடன் இணைந்ததான மிகையான சமூக பாதுகாப்பு வலை நிகழ்ச்சித்திட்டங்கள் என்பன இறைத் தொழிற்பாடுகளின் மீது அழுத்தத்தினை ஏற்படுத்தக்கூடும். அதேவேளை, அரசிற்குச் சொந்தமான வியாபாரத் தொழில்முயற்சிகளைப் பொறுத்தவரையில் வினைத்திறனற்ற முகாமைத்துவம் மற்றும் அவற்றின் உற்பத்திகளுக்கும் சேவைகளுக்கும் செலவுகளைப் பிரதிபலிக்கின்ற வகையில் தீர்வைக் கட்டமைப்புக்கள் காணப்படாமை போன்ற பிரச்சினைகளைக் கட்டுப்படுத்துவதற்கு முன்மதியுடைய வழிமுறைகள் எடுக்கப்படாவிட்டால் அவற்றிற்கான மாற்றல் கொடுப்பனவுகள் அதிகரிக்கக்கூடும். மேலும், அதிகளவான இயற்கை அனர்த்த சம்பவங்கள் அரசாங்கத்தின் செலவின முகாமைத்துவ முயற்சிகளின் மீது பாரியளவான சுமையினை ஏற்படுத்தக்கூடும். இப்பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு ஏற்கனவே சில முயற்சிகள் எடுக்கப்பட்டிருந்த போதிலும் அத்தகைய முயற்சிகளின் முன்னேற்றங்களின் மீது தொடர்ந்தும் கவனம் செலுத்துவது இறை உறுதிப்பாட்டிற்கு இன்றியமையாததாகும்.

### அரச செலவினம்: பாதிடப்பட்டவை எதிர் உண்மையானவை

உண்மையான அரச செலவினம் பாதிடப்பட்ட மதிப்பீடுகளிலும் பார்க்கக் குறைவாக இருந்தபோதும், அண்மைய ஆண்டுகளில் துணைநிரப்பு ஒதுக்கீடுகள் அடிக்கடி சமர்ப்பிக்கப்படுவது அரச செலவின முகாமைத்துவத்தின் வினைத்திறனான

வரைபடம் சி.கு. 10.1


அரசிறையும் செலவினமும்




*மூலம்* : நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சு

வரைபடம் சி.கு. 10.2


அரச செலவினம் - பாதிடப்பட்ட எதிர் உண்மையான




*மூலம்* : நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சு


6

வரைபடம் சி.கு. 10.3
அரசிறையின் சதவீதமாக மீண்டெழும் செலவினம்




*மூலம்* : நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சு

வரைபடம் சி.கு. 10.4
அரசாங்க ஊழியர்கள் மற்றும் சம்பளங்கள் மற்றும் கூலிகள் மீதான செலவினம் மற்றும் ஓய்வூதியக் கொடுப்பனவுகள்




(அ) மத்திய அரசாங்க, உள்ளூராட்சி அரசாங்கம் மற்றும் மாகாணசபைகள் என்பவற்றின் ஊழியர்களை உள்ளடக்குகின்றது.

*மூலம்* : நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சு

தன்மையினை அடிக்கடி கேள்விக்குட்படுத்துகின்றது[1] (வரைபடம் சி.கு.10.2)[2]. கடந்த ஏழு ஆண்டுகளாக அரசாங்கம் துணைநிரப்பு ஒதுக்கீடுகளைத் தொடர்ச்சியாகத் திரட்டியிருந்ததுடன் அவற்றில் பெரும்பங்கானது படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகளின் பேரிலானதாகும்[3]. அரசாங்கத்தின் அத்தகைய கட்டாய செலவுகளைப் பூர்த்தி செய்வதற்கான துணைநிரப்பு ஒதுக்குகளைச் சமர்ப்பிப்பது அரச செலவினத்தின் முன்மதியுடைய முகாமைத்துவத்திற்கு உதவுவதில்லை. அத்தகைய நடைமுறைகள் மற்றைய துறைகளிலிருந்தான பெரும்பாலும் மூலதனச் செலவினத்தினைக் கட்டுப்படுத்துவதற்கான கோரிக்கையாகவே அடிக்கடி இருக்கின்றதுடன் இது நாட்டின் பொருளாதார வளர்ச்சி வாய்ப்புக்களை பாதிக்கக்கூடும். ஆகவே, இலங்கையின் இறைத் தொழிற்பாடுகள் தொடர்பான பிரச்சினைகள் அரசிறைப் பற்றாக்குறையுடன் தொடர்பானவை மாத்திரமன்றி செலவினத்தின் உத்தமமற்ற முகாமைத்துவத்தின் மீதான தாக்கத்தினையும் எடுத்துக்காட்டுகின்றது.

## மீண்டெழும் செலவினத்தின் முகாமைத்துவம்

வட்டிக் கொடுப்பனவுகள், சம்பளங்கள் மற்றும் கூலிகள் மற்றும் ஓய்வூதியக் கொடுப்பனவுகள் போன்ற கட்டாய இறைச் செலவினங்களின் பங்கு அதிகரித்து வருவதினாலும் இம்மூன்று துணைக் கூறுகளும் ஒன்றுசேர்ந்து 2019இற்கான அரசிறையில் 96 சதவீதத்தினைப் பயன்படுத்திக் கொண்டமையினாலும் இறைத் தொழிற்பாடுகள் மீதான அவற்றின் அழுத்தம் தொடர்ந்தும் அதிகரித்து வருகின்றது (வரைபடம் சி.கு. 8.3). அதேவேளை, வட்டிக் கொடுப்பனவுகள் மற்றும் சம்பளங்கள் மற்றும் கூலிகள் மீதான செலவினம் மாத்திரம் 2019இன் அரசிறையில் ஏறத்தாழ 36 சதவீதத்தினைப் பயன்படுத்திக் கொண்டுள்ளன. மேலும், ஓய்வூதியங்கள் உட்பட, கடந்த ஆண்டுகளாக அதிகரித்துச் செல்லும் போக்கினைக் கொண்டிருக்கும் மானியங்கள் மற்றும் மாற்றல்கள் என்பன 2019இன் அரசிறையில் 26.7 சதவீதத்திற்கு வகைகூறியிருந்தன. தனியாள் ஊதியங்கள், மானியங்கள் மற்றும் மாற்றல்கள் மீதான அத்தகைய பாரிய செலவினங்கள், சுகாதாரம், கல்வி, வேளாண்மை மற்றும் நீர்ப்பாசனம் போன்ற சமூக மற்றும் பொருளாதாரப் பணிகள் மீதான ஏனைய மீண்டெழும் செலவினத்திற்கான ஏற்பாட்டிற்கு சிறிதளவு மாத்திரமே இடமளிக்கின்றதுடன் மூலதனச் செலவினத்திற்குத் தேவைப்படும் மூலவளங்களை தனியாகப் பெற்றுக்கொள்ள வேண்டியுள்ளது.

### *தனியாள் ஊதியங்கள் மீதான செலவினம்*

சம்பளங்கள், கூலிகள் மற்றும் ஓய்வூதியக் கொடுப்பனவுகள் என்பவற்றின் மீதான செலவினம் கடந்த ஆண்டுகளில் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்துள்ளது. அரச துறைக்கான ஆட்சேர்ப்புக்களில் காணப்பட்ட அதிகரிப்பு, சம்பளங்கள் மற்றும் ஓய்வூதியக் கொடுப்பனவுகளில் செய்யப்பட்ட மேல் நோக்கிய திருத்தங்கள் என்பவற்றின் காரணமாக சம்பளங்கள், கூலிகள் மற்றும் ஓய்வூதியக் கொடுப்பனவுகள் என்பன முன்னைய ஆண்டினை காட்டிலும் 2019இல் 11.4 சதவீதத்தினால் அதிகரிப்பதற்கு பங்களித்திருந்தன (வரைபடம். சி.கு.10.4). 2010-2019 காலப்பகுதியில், சம்பளங்கள் மற்றும் கூலிகள் மற்றும் ஓய்வூதியக் கொடுப்பனவுகள் என்பன சராசரியாக அரசிறையில் ஏறத்தாழ 45 சதவீதத்திற்கு வகைகூறியிருந்தன. இலங்கையின் குடித்தொகை விரைவாக வயது முதிர்ந்து வருவதும் அரச ஊழியர்களின் அளவு நிதியிடப்படாத ஓய்வூதியத் திட்டங்களுக்கு மத்தியில் பெரிதாகி வருவதனாலும் சம்பளங்கள் மற்றும் கூலிகள் மற்றும் ஓய்வூதியக் கொடுப்பனவுகள் போன்றவற்றின் செலவினத்தின பேரிலான இறைச் சுமை எதிர்காலத்தில் கணிசமாக உயர்வடையக்கூடும்.

### *மானியங்கள் மற்றும் மாற்றல்கள் மீதான செலவினம்*

அரசாங்கம் மானியம் மற்றும் மாற்றல் நிகழ்ச்சித்திட்டங்களின் மீது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஏறத்தாழ 3-4 சதவீதத்தினை (அரச வருமானத்தில் ஏறத்தாழ 15 சதவீதத்திற்குச் சமமானது அல்லது கூடுதலானது) செலவிட்டு வருகின்றது. இத்தகைய மானியங்கள் பொருளாதார ரீதியில் பாதிக்கப்படக்கூடிய குடும்பத்தினரின் வாழ்க்கைத்தரத்தினை


1 அரசாங்கத்தின் மேலதிக நிதித் தேவைப்பாடுகளை பூர்த்தி செய்வதற்காக குறிப்பிட்டதொரு ஆண்டிற்கான வரவு செலவுதிட்டச் செலவினத்திற்காக மேலதிகமாகத் திரட்டப்பட்ட நிதி

2 துணைநிரப்பு ஒதுக்கீடுகளுக்காக திரட்டப்பட்ட நிதி அவ்வாண்டுப் பகுதியில் முழுமையாக பயன்படுத்தப்பட்டதென எடுகோள் கொள்ளப்படுகின்றது.

3 தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களத்தின் செயலாற்றல் அறிக்கையின்படி.

6

வரைபடம் சி.கு. 10.5
மானியங்கள் மற்றும் மாற்றல்கள் மீதான செலவினம்




*மூலம் : நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சு*

வரைபடம் சி.கு. 10.6
மீண்டெழும் செலவினம் மற்றும் பொது முதலீடு என்பவற்றின் சார்புரீதியான பங்கு





*மூலம் : நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சு*

உயர்த்தும் நோக்குடன் வழங்கப்பட்டு வருகின்ற போதும் சில மானியம் மற்றும் மாற்றல் நிகழ்ச்சித்திட்டங்கள் வறுமையினைக் குறைப்பதில் காத்திரமற்ற தன்மையினைக் கொண்டனவாகவும் மோசமான இலக்கிடல் உயர்மட்ட கசிவுகள் என்பனவற்றிலிருந்து தோன்றுகின்ற வினைத்திறனற்ற தன்மையின் காரணமாக சமமான பங்கீட்டினைக் கொண்டிராமையினையும் அடிக்கடி அவதானிக்க முடிகின்றது. எடுத்துக்காட்டாக, சமூகத்திலுள்ள பாதிக்கப்படக்கூடிய மக்களின் வாழ்க்கைத்தரத்தினை மேம்படுத்தும் நோக்குடன் சமுர்த்தி நிகழ்ச்சித்திட்டம் நடைமுறைக்கிடப்பட்டு வருகின்ற போதும், பயன்பெறுநர்கள் பல ஆண்டுகளாக இந்நிகழ்ச்சித்திட்டத்திற்குள் காணப்படுவதனையும் அடிக்கடி அவதானிக்க முடிகின்றது. அதேவேளை தற்போதைய தெரிவுச் செயன்முறையின் கீழ் தகைமையற்ற நபர்கள் இந்நிகழ்ச்சித்திட்டத்திற்குள் நுழைந்துள்ளனர். வளமாக்கி மானியம் நிகழ்ச்சித்திட்டத்தினைப் பொறுத்தவரை, மானியம் வழங்கப்பட்ட வளமாக்கியினை அளவுக்கதிகமாக பயன்படுத்துவது போன்ற பிரச்சினைகள் நிகழ்ச்சித்திட்டத்தின் காத்திரமான தன்மையினையும் நீடித்துநிலைத்திருக்கும் தன்மையினையும் பாதிக்கின்ற அதேவேளையில் மண் மற்றும் நீர் மாசடைதல் மற்றும் நாட்டின் உணவுப் பாதுகாப்பு போன்றவற்றுடன் தொடர்புடைய கரிசனைகளையும் தோற்றுவிக்கின்றது. மேலும், முதிர்ச்சியடைந்துவரும் குடித்தொகையினர் காரணமாக சுகாதாரம், கல்வி மற்றும் சமூக பாதுகாப்பு வலையமைப்பிற்கான ஏற்பாடு போன்ற துறைகளில் நாட்டின் செலவினத்தினை அதிகரிக்க வேண்டிய தேவையும் காணப்படுகின்றது. மேலும், இலங்கை வெள்ளப் பெருக்கு, மண்சரிவு மற்றும் வரட்சி போன்ற பொதுவான காரணங்களினால் அடிக்கடி இயற்கை அனர்த்தங்களுக்கு உட்படுவதுடன் உயிரிழப்புக்களும் சொத்து இழப்புக்களும் அதிகரித்து வருகின்ற அதேவேளையில் அரச வரவு செலவுத்திட்டத்தின் மீது மேலதிக அழுத்தங்களுக்கும் இட்டுச்செல்கின்றது. கொவிட்-19 தொற்றின் அண்மைய பரவலும் அத்தகைய துரதிஷ்டவசமான சம்பவங்களைக் கட்டுப்படுத்துவதற்கான இறை இடைவெளிக்கான தேவையும் அதேபோன்று கோரிக்கை விடுக்கப்படுமிடத்து பாதிக்கப்பட்ட வியாபாரங்களுக்கும் தனிப்பட்டவர்களுக்கும் மானியங்களைப் பகிர்ந்தளிப்பதற்கு மேம்பட்ட முறைமையொன்றின் தேவைப்பாட்டையும் எடுத்துக்காட்டியுள்ளது. ஆகவே, இழப்பீடு மற்றும் தணிப்பு நடவடிக்கைகள் என்பன மீது உறப்படுகின்ற செலவுகளின் பேரில் இயற்கை அனர்த்தங்களின் அதிகரித்த சம்பவங்களிலிருந்து தோன்றிய திட்டமிடப்படாத செலவினம் அரச செலவினத்தினை முகாமைப்படுத்துவதன் மீதான அழுத்தத்தினை அதிகரிக்கக்கூடும். மேலும், அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகள் தொடர்பில் அவற்றின் பலவீனமான நிதியியல் செயலாற்றத்திற்கு நீடித்துநிலைத்திருக்கும் அடிப்படையில் மீட்சியடையச் செய்வதற்கும் அவற்றின் நிதியியல் பலத்தினை மேம்படுத்தவும் பொருத்தமான வழிமுறைகள் முன்னெடுக்கப்படாவிட்டால் எதிர்வரும் காலத்தில் அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளுக்கான மாற்றல்கள் மேலும் அதிகரிக்கக்கூடும்.

### அரச முதலீடுகள் மீதான செலவினம்

மீண்டெழும் செலவினத்தின் அதிகரித்துவரும் பங்கானது அரச முதலீடுகளுக்குக் கிடைக்கத்தக்க நிதியின் அளவினை மட்டுப்படுத்தியிருக்கின்றது (வரைபடம் சி.கு. 10.6). எனினும், அரச முதலீட்டினைக் கட்டுப்படுத்துவது எதிர் விளைவுகளைக் கொண்டிருக்கும் என்பதுடன் நடுத்தர மற்றும் நீண்ட காலத்தில் பொருளாதார வளர்ச்சியையும்

வரைபடம் சி.கு. 10.7
பொது முதலீட்டின் உள்ளடக்கம்




*மூலம் : நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சு*

6

தளர்வுறச் செய்துவிடும். முக்கியமாக பொருளாதாரம் மற்றும் சமூக உட்கட்டமைப்புத் துறைகளின் மீதான அரச துறை முதலீடுகளில் மெதுவான போக்கொன்று கடந்த தசாப்த காலத்தில் அல்லது அதற்கும் கூடுதலான காலப்பகுதியில் அவதானிக்கப்பட்டிருந்தது (வரைபடம் சி.கு. 10.7). அரச முதலீட்டில் மிகப்பெரும் விடயமாக விளங்கும் பொருளாதார உட்கட்டமைப்பின் மீதான செலவினம் வேளாண்மை மற்றும் நீர்ப்பாசனம், வலு மற்றும் நீர்வழங்கல், போக்குவரத்து மற்றும் தொடர்பூட்டல் என்பவற்றை உள்ளடக்கியிருப்பதுடன் பொதுவான கீழ் நோக்கிய போக்குடன் கடந்த ஆண்டுகளாகக் கணிசமான வேறுபாடுகளைப் பிரதிபலித்த வேளையில் கல்வி, சுகாதாரம், வீடமைப்பு மற்றும் சமூகப் பணிகள் என்பனவற்றை உள்ளடக்கிய சமூக உட்கட்டமைப்பு மீதான செலவினம் தொடர்ந்தும் குறைவாகக் காணப்பட்டது. மீண்டெழும் செலவினத்தில் காணப்படும் மிதமிஞ்சிய செலவினத்தினை எதிரீடு செய்யும் பொருட்டு அரச முதலீடுகளில் அத்தகைய குறைந்த மட்டங்களைப் பேணுவது நாட்டின் நீண்டகால அபிவிருத்தி வாய்ப்புக்களுக்கு இடையூறாக விளங்கக் கூடும்.

### முன்னோக்கிப் பயணித்தல்

இறைத்திரட்சியை வலுப்படுத்துவது அரச செலவினத்தின் காத்திரமான முகாமைத்துவத்தினையும் அதேவேளையில் அரசிறைக்கும் பொருளாதார வளர்ச்சிக்குமிடையில் பொருத்தமான சமநிலையொன்றினைப் பேணுவதனையும் தேவைப்படுத்துகின்றது. செலவின முகாமைத்துவம் இறை ஒழுங்குகளுக்கான கடப்பாடுகளையும் வரவு செலவுத்திட்டச் செலவுகள் வருடாந்த வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகளுடன் இசைந்து செல்லும் விதத்தில் பேணப்படுவதனையும் தேவைப்படுத்துகின்றது. இது தொடர்பில், அரச துறைக்கு ஆட்சேர்ப்புச் செய்வதில் நன்கு திட்டமிடப்பட்ட கொள்கையன்று உட்பட அரசாங்கம் பின்பற்றப்பட வேண்டிய பல்வேறு அம்சங்கள் தொடர்பில் முக்கியமாக வலியுறுத்தப்படுகின்றதுடன் இதன் ஊடாக சம்பளங்கள், கூலிகள் மற்றும் ஓய்வூதியப் பொறுப்புக்கள் மீதான செலவினம் கட்டுப்படுத்தப்படுகின்றது. நாடளாவிய ரீதியில் பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தினை அறிமுகப்படுத்துதல் மற்றும் ஓய்வூதிய வயதினை நீடிப்பதற்கான சாத்தியத்தன்மை என்பவற்றை மாற்று ஏற்பாடுகளாகப் பரிசீலனையில் கொள்ள முடியும். அதேவேளை, 2020இன் தொடக்கத்தில் நிறுவப்பட்ட தேசிய சம்பளங்கள் ஆணைக்குழு அரச மற்றும் தனியார் துறைகளின் ஊதிய அமைப்பினை மீள ஆராய்வதன் மூலம் புதிய சம்பளங்கள் கொள்கையொன்றினை வடிவமைத்து நிறைவேற்றுவதற்கு அரசாங்கத்திற்கு வழிகாட்டலையும் உதவியையும் வழங்கமுடியும். மேலும், பாதுகாப்பு வலையமைப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் சிறந்த முறையில் இலக்கிடப்படுவதனை உறுதிப்படுத்துவதன் மூலம் மானியங்கள் மற்றும் மாற்றல்கள் மீதான செலவினத்தினைச் சிக்கனப்படுத்த முடியும். அதேவேளையில், தேவையற்ற நிருவாக செலவினங்களையும் கட்டுப்படுத்த முடியும். இது தொடர்பில், மிகக் கவனமாக வடிவமைக்கப்பட்ட முறையியலொன்றினூடாக சமூகத்திலுள்ள பொருளாதார ரீதியாக பாதிக்கப்படக்கூடிய பிரிவினரை அடையாளம் காண்பது உண்மையற்ற பயன்பெறுநர்களை நிகழ்ச்சித்திட்டத்திலிருந்து நீக்கவிடுவதற்கு உதவக்கூடும். மேலும், அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் கண்காணிப்புச் செய்முறைகளை வலுப்படுத்துவது இழப்புக்களை ஏற்படுத்துகின்ற அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளை இலாப மீட்டும் தொழில்முயற்சிகளாக மாற்றுவதற்கு அரசாங்கத்தினை இயலச்செய்யும் அதேவேளையில் ஏற்கனவே இலாபத்தினை ஈட்டும் நிறுவனங்களின் இலாபத்தினை அதிகரிப்பதன் ஊடாக மத்திய அரசாங்கத்தின் வரவு செலவுத்திட்டத்தின் மீதான சுமையினையும் குறைக்க முடியும். மேலும், அரசிற்குச் சொந்தமான 13 தொழில்முயற்சிகளினாலும் கையொப்பமிடப்பட்ட கம்பனி நோக்கக் கூற்றுக்களை அவை காத்திரமான விதத்தில் பின்பற்றுவதனை உறுதிப்படுத்துவது அரச தொழில்முயற்சிகளின் காத்திரமான தன்மையினை அதிகரிக்கும். அதேவேளை, நடுத்தர காலத்திலிருந்து நீண்ட காலம் வரையான காலப்பகுதியில் எதிர்பார்க்கப்பட்ட வளர்ச்சியை நனவாக்கிக் கொள்வதற்கு பௌதீக உட்கட்டமைப்பிலும் மனித மூலதனத்திலும் இன்றியமையாத முதலீடுகளைத் தொடர்ந்தும் மேற்கொள்ளவேண்டியது அவசியமானதாகும். இது தொடர்பில், முன்னுரிமைத் துறைகளில் திட்டமிடப்பட்ட அரச முதலீடுகளைக் கட்டுப்படுத்துவதோ அல்லது பிற்போடுவதோ தவிர்க்கப்படவேண்டியதுடன் நீடித்துநிலைத்திருக்கும் வகையில் அரச தனியார் பங்குடமை போன்ற மாற்று நிதியிடல் ஏற்பாடுகளை அடையாளங் காணப்படலும் வேண்டும்.

6